மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை நல்ல முறையில் கடைபிடிக்கச் சொல்லி எல்லாக் கல்லூரிகளுக்கும் நாம் ஆணை யிட்டிருக்கிறோம்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாலை நேர சட்டக் கல்லூரி எந்த எந்த இடங்களில் செயல்படுகின்றன திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் அது அமல்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலும் அது அமல்படுத்தப்பட்டு வருகிறது. மதுரை, கோயம்புத்தூரில் கொஞ்சம் குறைவான இடங்களும், சென்னை யிலே கொஞ்சம் அதிகமான இடங்களும் இருக்கின்றன.

Private markets in Madras City

*26—(Q.No.10150) THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state.

(a) Whether this Government have any proposal to take over the private markets in the Madras City; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த பொது அங்காடிகளை அரசு மேற்கொள்வதற்கான யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். எந்தக் காரணங்களினால், எந்த நிகழ்ச்சிப் போக்குகளினால் அப்படிப்பட்ட ஒரு யோசனையை மேற்கொள் வதற்கு அரசாங்கத்திற்கு பேஸிஸ் (Basis) இருந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தனியார் சந்தைகளை மாநிலத்திற்கு உடமையாக்கவேண்டுமென்று சொன்னால் அது தேசியமயக் கொள்கை. ஆகவே அந்தக் கொள்கையை நிறைவேற்றவேண்டும் என்று சொன்னால் சட்ட திருத்தங்களை மத்திய அரசினுடைய ஒப்புதலோடு கொண்டுவர வேண்டியிருக்கிறது. அதனால்தான் ஆய்விலே இருந்துகொண்டு இருக்கிறது என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருக்கக்கூடிய அந்த யோசனையின்படி எப்படிப்பட்ட பொது சந்தைகள் அல்லது அங்காடிகள் என்று சொன்னால் எப்படிப்பட்ட ரகங்கள், எந்த எந்தப் பொருட்கள் விற்கக்கூடிய அங்காடிகள், வெறும் மார்க்கட்டா, காய்கறிகள் விற்கக்கூடிய மார்க்கட்டா, ஷாப்பிங் காம்ப்ளக்ஸா, எந்த மாதிரியான ரகங்கள் அதிலே அடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 பிப்ரவரி 15

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பிரைவேட் சான்டிஸ், பிரைவேட் மார்க்கட்ஸ் என்று வகைப் படுத்தப்பட்டு தமிழகத்திலே உள்ள அத்துனை தனியார் சந்தைகளும் தனியார் மார்க்கட்டுகளும் அரசுடைமையாக்கப்படுவதற்கான சட்டதிருத்தங்கள் கொண்டுவருவதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. மிக விரைவிலே அவை கொண்டுவரப்படும்.

திரு வே இராஜசேகரன் : தலைவர் அவர்களே, சென்னையிலே தனியார் அங்காடிகள் எத்தனை எண்ணிக்கை இருக்கிறது? மாநகராட்சி அங்காடிகள் எத்தனை இருக்கிறது? புதிய அங்காடிகள் துவக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தனியார் சந்தைகள் 41, மாநகராட்சி சந்தைகள் 21. ஆகவே பாக்கியிருக்கக்கூடிய கமர்ஷியல் காம்ப்ளக்ஸ், ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அங்காடி கட்டும் திட்டத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளை அரசுடைமை ஆக்குகின்ற திட்டத்திற்கு முன்பாக, இருக்கின்ற தனியார் கடைகளில் 'நாட் ஈவன் பேசிக் அமெனிட்டிஸ்' அங்கே சந்தைகள் கூடுகின்ற நேரங்களில் மலஜலம் கழிக்க கக்கூஸ் வசதி, தண்ணீர் வசதி இல்லாமல் பல சந்தைகள் இருக்கின்றன, அவைகளை மேம்படுத்துவதற்கு சட்ட திட்டம் ஏதேனும் கொண்டுவர அரசிடம் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தனியார் சந்தைகளை நேரடியாக நானே பார்வையிட்டேன். பாழடைந்த நிலையில், துப்புரவு பணி நடக்காத நிலையில் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைபோன்று துர்நாற்றம் வீசுகின்ற பல்வேறு சந்தைகள் இருக்கின்றன. ஆகவே இவைகளை ஒழுங்கு படுத்துகின்ற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தைகளை அரசுடைமை ஆக்கும்போது தனியார்கள் கோர்ட்டுக்கு போகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்கு போகாமல் தடுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோர்ட்டுக்கு போவதை தடை செய்வது என்பது ஒரு ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதை தடை செய்வது போன்றதாகும். ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கையில் நாம் ஈடுபடாமல் ஒரு பொது எண்ணத்தின் அடிப்படையில் தூய கொள்கையின் அடிப்படையில் இதைக்கொண்டு வருவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு இருக்கிறது.